
MB COMICS STUDIO
நந்தினியின்
சிவப்புக்கல் மூக்குத்தி™
புதிய டிஜிடல்
கிராஃபிக் நாவல்
தமிழில்
மகேஷ்
சாய்நாத்
ஜெரால்ட்
www.mbcomicstudio.com


MB
நந்தினியின்
சிவப்புக்கல் மூக்குத்தி™
புதிய டிஜிடல்
கிராஃபிக் நாவல்
தமிழில்
மகேஷ்
சாய்நாத்
ஜெரால்ட்
www.mbcomicstudio.com

நந்தினியின்

# சிவப்புக்கல் மூக்குத்தி™

எழுத்து, படைப்பு, தயாரிப்பு

நந்தினி.ஜெ.எஸ்

ஓவியங்கள்

மகேஷ்.ஆர்

சாய்நாத்.பா

உதவி எழுத்தாளர்

ஜெரால்ட் ராகேஷ்

Copyright @2015 Nandhini JS

All rights reserved. No part of this book may be reproduced or transmitted in any form or by any means , graphic, electronic or mechanical, including photocopying, recording, taping or by any information storage or retrieval system,without the permission in writing from Nandhini JS.

Names, characters, places and incidents featured in this publication are all products of the author's imagination and are ficticious. Any resembleance to actual persons living or dead is purely coincidental.

# சமர்ப்பணம்

அன்பு மகள் ரிஷிதாவிற்கு

# நன்றிகள்


பல ஆயிரம் அடி உயரத்துல பறக்குற விமானத்துலேர்ந்து குதிக்க தைரியம் வேணும்னா, நம்மக் கிட்ட ஒரு பாராசூட் இருக்கணும். எனக்கு என் அப்பா தான் பாராசூட். அவரோட அன்பாலயும், ஊக்கத்தாலயும் தான் என்னோட க்ரியேட்டிவ் வாழ்க்கை பயணத்துல புதுப்புது முயற்சிகளை எடுக்க முடிஞ்சிருக்கு. என் முதல் நன்றி என் அப்பா திரு.ஜெயாநந்தன் அவர்களுக்கு.

பல வருடங்களா, நம்பிக்கையோடவும், பொறுமையோடவும், என் எல்லா முயற்சிகளுக்கும் தொடர்ந்து ஆதரவு தந்துட்டு இருக்குற என் கணவர் திரு.சுக்தேவ் அவர்களுக்கு நன்றி.

என்னைப் பத்தின கவலை ஒரு பக்கமும், பெருமை ஒரு பக்கமும் மனசுல வெச்சிருக்குற அம்மா திருமதி.கிரிஜா அவர்களுக்கும், குடும்பத்தையும் பாசத்தையும் விட்டுக்கொடுக்காத என் அருமைத் தம்பி திரு.முருகாநந்தன் அவர்களுக்கும் நன்றிகள்.

இந்த ‘சிவப்புக்கல் மூக்குத்தி’ கிராஃபிக் நாவல் தடையில்லாம முழுமையடைய முக்கியக் காரணம் என் நண்பர் திரு. ஸ்ரீராம் வேணுகோபால் அவர்கள். சரியான நேரத்துல, பெருந்தன்மையோட அவர் செஞ்ச உதவிய என்னால மறக்கவே முடியாது. நன்றி நண்பா.

சினிமாவுலயும், விளம்பரப்படங்கள்லயும் என்னோட உதவி இயக்குனர்களா இருந்து, இந்த நாவல் தயாரிப்பு சம்மந்தப்பட்ட வேலைகள்லயும் எனக்கு உறுதுணையா இருந்த திரு.ஜெரால்ட் மற்றும் திரு.மணி கண்டன் அவர்களுக்கும் என்னோட நன்றிகள்.


MB COMICSTUDIO


Digitally Published by MB Comics Studio, a part of Make Believe Productions,
Plot # 11, Door # 17, 2nd Floor, Kundrakudi Nagar, 2nd Street, Adambakkam,
Chennai - 600088, India.
www.mbcomicstudio.com


சென்னை - மாலை நேரம்.
அந்த திருச்சி பார்ட்டி எப்ப அட்வான்ஸ் தரப்போறான்?
இப்படியே இழுத்தடிச்சிட்டு இருந்தா அப்புறம் நான் வேற பார்டிய பாக்க வேண்டி வரும்!
ஏண்ணே கோவப்படுறீங்க? பத்தாந்தேதிக்குள்ள குடுத்துடறேன்னு சொன்னாரு..
அன்னிக்கே ரெஜிஸ்டரேஷன் வெச்சுக்கலாம்.
வருண்!
சந்துரு! எங்கேடா போனே? நான் இங்கே வந்து அரை மணி நேரமாச்சு!
சர்வலக்ஷ்மி பில்டர்ஸ் க்ளையன்ட் ஃபோன் பண்ணினாரு டா.. நாலு மணிக்கு வந்து டாக்குமெண்டஸ் வாங்கிக்க சொன்னாரு... வா போலாம்.
அப்ப நான் கௌம்பறேண்ணே... இன்னொரு க்ளையண்ட்'ஐ போய் பாக்க வேண்டியிருக்கு.
சரி தம்பி. ஆனா எப்படியாவது இந்த டீலை சீக்கிரமா முடிச்சிக் குடுத்துரு.
உங்க ஆஸ்தான ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் என் கிட்ட பொறுப்பை ஒப்படைச்சிட்டீங்கல்ல?
கவலையேப் படாதீங்க! அடுத்த வாரம் திருச்சி பார்ட்டிய நானே கையோட கூட்டிட்டு உங்க ஆபீஸுக்கு வரேன்.


நல்லது...
போயிட்டு
வாங்க
லிப்டு எங்கே?
க்ரீஈஈஈஈஈச்!
ஹூம்! கீழ
போயிட்டு
இருக்கு.
தம்பி!
தம்பி! என்ன
பண்றீங்க?
டேய்!
டேய்! டேய்!
பாத்துடா!
துட்!


தொம்!
ஜப்பான்ல ஜாக்கிசானா பொறந்துருக்க வேண்டியவன். இவன் பண்ற ரவுசு இருக்கே! யப்பப்பா!
ஏன் மச்சி உர்ர்ர்ன்னு இருக்கே? எனி ப்ராப்ளம்?
நீ தாண்டா ப்ராப்ளம்! பொறுமையா லிஃப்டுல ஏறி வரலாம்ல?
என்னாத்துக்கு சர்கஸ்காரன் மாதிரி டைவ் அடிக்கிறே?
லிஃப்ட் வர்ர வரைக்கும் வெயிட் பண்ணிட்டு இருந்தா க்ளையண்ட் மீட்டிங்குக்கு லேட் ஆயிடாது?
லேட்டா போறது நமக்கு என்ன புதுசா?
திடீர்ன்னு எக்குத்தப்பா கால் ஸ்லிப் ஆகி உனக்கு ஏதாவது ஆச்சுன்னா என்னடா பண்றது?
இன்னிக்கின்னு என்னடா என் மேல உனக்கு இவ்வளவு அக்கறை?
ஆங்?! அதெல்லாம் ஒண்ணுமில்ல.. வண்டியில ஏறு!


டேய்! எங்கே போறே? அண்ணா நகருக்கு ரைட்ல திரும்பணும்..
அது வந்து... க்ளையண்ட் ஆபீஸ் இன்னிக்கு லீவாம்...
நேரா கோடம்பாக்கத்துல இருக்குற அவர் வீட்டுக்கே வர சொல்லிட்டாரு.
ஓஹோ! பட்... அவரோட வீடும் அண்ணா நகர்ல தானே இருக்கு?
அவன் கோடீஸ்வரன்! நாலஞ்சு வீடு வெச்சிருப்பான்!
ஏண்டா எரிச்சலை கௌப்புறே? நான் என்ன உன்னை கண்காணாத இடத்துக்குக் கடத்திட்டா போறேன்?!
பிக் அப் பண்ற ஃபிகர் கூட இத்தனை கேள்வி கேக்க மாட்டா!!
அட்ரஸ் மாறி வந்துட்டோம்னு நினைக்கிறேன்.. க்ளையண்ட் பேரு ராமநாதன் இல்ல? இங்கே சகாயம்னு போட்டுருக்கு...
ம்ம்ம்?..... நியூமராலஜிபடி நேத்து தான் மாத்தினாராம்.
ர்ர்ர்ர்ரிங்!
ரொம்ப எடக்கு மடக்கா பேசறானே... என்னவோ சரியில்ல!
ஹீ ஹீ!
க்ளக்!
வாங்க வாங்க... உள்ள வாங்க..


ஏன் வாசல்லயே நிக்கறீங்க? உள்ளே வாங்க.
ஹா ஹா ஹா ஹி ஹி
ஆஹா! வசமா மாட்டிக்கிட்டேன்!
ஜாதகப் பொருத்தம் இவ்வளவு அருமையா அமையும்ன்னு நாங்களே எதிர்ப்பாக்கல.
எல்லாம் கடவுள் அனுக்கிரஹம் தான்.
வாப்பா வருண்...
சார், இது சந்துரு, வருணோட பெஸ்ட் ஃப்ரெண்ட்!


பெஸ்ட் ஃப்ரெண்ட்'டாடா நீ???? துரோகி!!
உங்கம்மா அப்பா தான் எப்படியாவது இன்னிக்கு உன்னை பொண்ணு பாக்க கூட்டிட்டு வர சொன்னாங்க..
உண்மைய சொன்னா நீ வரவா போறே? அதான் இப்படி!
ப்ச்! டேய்! உனக்குத் தான் என் கதை தெரியுமில்ல?
உன் பழைய ப்ளாக் அண்ட் வைட் ஃப்ளாஷ்பெக்'ஐ சொல்லி சொல்லி எத்தனை வருஷத்துக்குடா டிமிக்கி குடுத்துட்டு இருக்கப் போறே?
வயசாகுதுல்ல? கத்திரிக்கா முத்தினா கடைத்தெருவுக்கு வந்து தானே ஆகணும்?
எப்படியோ உன்னை வரவெச்சாச்சு! அப்பாடா!
சரி, சரி... இப்படி மூஞ்சிய தொங்கப் போட்டுட்டு இருக்காதே! கொஞ்சம் சிரி.
உனக்குத் தெரியாம இந்த ஏற்பாட்டை செஞ்சது தப்புதான் வருண். ஆனா நாங்க உன்னை பெத்தவங்கடா... உனக்கு நல்லபடியா கல்யாணம் செஞ்சு வைக்கிறது எங்களோட கடமை! எங்களுக்கும் ரொம்ப வயசாயிட்டே போகுதுல்ல? நாங்க போனப்புறம் உனக்குன்னு ஒரு குடும்பம் இருக்க வேணாமா? எல்லாம் உன் நல்லதுக்குத்தான் கண்ணா. புரிஞ்சிக்கோ.
இதுலேர்ந்து எப்படி தப்பிக்கிறது?


வருண்..... ஒரு வாட்டி பொண்ணு முகத்தைப் பாருடா...
ப்ளீஸ்! இப்ப நாங்க சொல்றதை கேளு. மத்ததை வீட்டுல போய் பேசிக்கலாம்.
ஏன் மாப்பிள்ளை ஒரு மாதிரி இருக்காரு?
தெரியலியே!
என்னாச்சு ?
எதாவது ப்ரச்சனையா?
மச்சி.. எல்லாரும் தப்பா எடுத்துக்கப் போறாங்க.
ஹும்!
நான் அவங்கக்கிட்ட கொஞ்சம் தனியா பேசணும்.


ஸாரி...
எனக்கு இந்த
ஏற்பாடு பத்தி
தெரியாது.
தெரிஞ்சிருந்தா
வந்திருக்கவே
மாட்டேன்.
நான்....
கல்யாணமே
வேணாம்னு
இருக்கேன்.
ஒரு காலத்துல,
முடிவேயில்லாத
உண்மையான காதல்னு
ஒண்ணு இருக்குன்னு
முட்டாளத்தனமா நம்பிட்டு
இருந்தேன்.
ஆனா அப்படியெல்லாம்
எதுவும் இல்லங்கற
கசப்பான பாடத்தை
வாழ்க்கை எனக்கு
கத்துக்குடுத்துது.
காதல்ல விழுந்தது
லைஃப்லயே நான்
செஞ்ச மிகப் பெரிய
தப்பு!
ஆரம்பத்துல
உணர்வு பூர்வமா,
தீவிரமா இருந்த அந்தக்
காதல், மூடுபனி மாதிரி
என் அறிவை
மறைச்சிடுச்சு.
அதுக்கப்புறம் அந்தப்
பனி விலக விலக,
பாசாங்கு, துரோகம்,
சுயநலம் இதெல்லாம் கலந்த
அந்தக் காதலோட
அசிங்கமான முகம் என்
கண்ணுக்கு தெரிய
ஆரம்பிச்சுது.
என் இதயம் சுக்கு
நூறா உடைஞ்சு, உலகமே
தலைகீழா ஆன மாதிரி
இருந்துது. எல்லாமே
முடிஞ்சு போச்சு....
மனசு
முழுக்க
தாங்கமுடியாத
வலி, வருத்தம்,
அவமானம்,
ப்ச்! என் புத்தி
எங்கே போச்சு?
எல்லாம் என் தப்புதான்!
முதல்லயே கவனமா
இருந்துருக்கணும்!
ஆனா ஒண்ணு...
எப்பேர்ப்பட்ட
வலிமையான மனசையும்
இந்த காதல் உடைச்சிடும்,
பைத்தியம் ஆக்கிடும்,
செயலிழக்க
செஞ்சிடும்.
மறுபடியும் அப்படிப்பட்ட
ஒரு நிலைக்கு ஆளாக நான்
தயாராயில்ல. யார் மேலயும் அன்பு
வைக்கிற தைரியமும் எனக்கில்ல.
நான் கடைசிவரைக்கும்
தனியாவே இருந்துடறேன்.
அகேன்...
ஐ'ஆம் ஸாரி.
இன்னிக்கு
உங்களுக்கு சிரமம்
குடுத்ததுக்கு
மன்னிச்சிடுங்க.
உங்களுக்கு
வேற இடத்துல,
ஒரு நல்ல திருமண
வாழ்க்கை அமைய
என்னோட
வாழ்த்துக்கள்.


சில நொடிகள் மௌனம்... மெல்லிசான ஒரு காத்து அந்த மௌனத்தை கலைக்கப் பாக்குது.
உங்க கஷ்டம் எனக்குப் புரியுது.
நாம எல்லாருமே காவியத்துலயும், கதைகள்லயும் வர்ர மாதிரி ஒரு உன்னதமான காதல தேடறோம். அது கிடைக்க எவ்வளவோ ரிஸ்க் எடுக்குறோம். கிடைச்சா கடைசிவரை சந்தோஷமா இருப்போம்ன்னு எதிர்ப்பாக்குறோம்.
அப்புறம் தான் தெரிய வருது... காதலுக்கும் ஒரு மறுபக்கம் இருக்கு! கசப்பான, மோசமான, கோரமான மறுபக்கம்! ஆனா அதைப்பத்தி யாரும் நம்மகிட்ட சொல்றதேயில்ல!
கதைகள்ல வர்ர மாதிரி காதல் புனிதமானதும் இல்ல... தெய்வீகமானதும் இல்ல.
நிஜத்துல, யார் நம்மள உயிருக்குயிரா நேசிக்கிறாங்கன்னு நினைக்கிறோமோ அவங்க தான் நம்ம உயிரே போற அளவுக்கு தாங்கமுடியாத காயங்களை விட்டுட்டுப் போறாங்க.
மறுபடியும் அது நடக்கக்கூடாதுன்னு, நம்மள சுத்தி நாமே ஒரு சுவர எழுப்பிக்கிறோம்.
ஆனா அந்த சுவர் நம்மள பாதுகாக்கறதில்ல.
மாறா, காயத்தோட தழும்புகளோடயும், பழைய நினைவுகளோடயும், அவமானங்களோடயும் நம்மள சிறைப்படுத்துது.
இனிமே வாழ்க்கையில காதலே தேவையில்லன்னு பலமுறை நமக்கு நாமே திரும்ப திரும்ப சொல்லிக்கிட்டாலும்.... அடி ஆழத்துல, நமக்கே தெரியாம, நம்ம மனசு அன்புக்காக ஏங்குதுங்குறதை மறுக்க முடியாது.


சுயநலமில்லாத மானசீகமான காதல் உண்டுன்னு நான் இன்னும் நம்பறேன். சும்மா ஜாலியா கனவு கண்டுட்டு, தலை கால் புரியாம பைத்தியமாக்குறதப் பத்தி சொல்லல....
மோகம், காமம் இதெல்லாம் தீந்துப் போனப்புறமும், ஒருத்தர் மேல ஒருத்தர் மரியதையோடவும், கனிவோடவும், புரிதலோடவும் இருந்து, எவ்வளவு கஷ்டமான சூழ்நிலையிலயும், எக்காரணத்தைக் கொண்டும் ஒருத்தரை ஒருத்தர் கைவிடாம இருக்குற காதலை நம்பறேன்.
ஒருத்தர் உங்கள ரொம்ப புண்படுத்திட்டாங்க -ங்கறத்துக்காக கடைசிவரை அந்த காயத்தோடவே வாழணும்ன்னு அவசியமில்ல.
அந்த வலி உங்க சந்தோஷத்தை கெடுத்து, வாழ்க்கையில எடுக்குற ஒவ்வொரு முடிவையும் ஆக்கிரமிக்க நீங்க விடக்கூடாது.
அதுலருந்து உடனடியா விடுபடுறது கஷ்டம்தான்... ஆனா கண்டிப்பா என்னைக்காவது ஒருநாள் அந்த வலி அடங்கும். காலம் எல்லாத்தையும் மாத்தும்.
அதுவரைக்கும் நாம நல்ல ஃப்ரெண்ட்ஸா இருக்குறதுல ஒண்ணும் தப்பில்லையே?
இதான் மாயா...


அடுத்த ரெண்டு வருஷங்கள் எப்படி ஓடுச்சுன்னே தெரியல...
மாயாவோட பழகப் பழக, குழப்பங்களோட இருந்த என் மனசு கொஞ்சம் கொஞ்சமா தெளிவாக ஆரம்பிச்சிது.
என்னை புண்படுத்தினவங்க மேல இருந்த வெறுப்பும் கசப்பும் குறைஞ்சிது... எங்கேயிருந்தாலும் அவங்க நல்லாயிருக்கட்டும்ன்னு மானசீகமா வாழ்த்தினேன்.
எப்பவும் கடந்த காலத்தை மட்டுமே நினைச்சு நினைச்சு வருத்தப்பட்டுட்டு இருந்த என்னை நிகழ்காலத்துல கவனம் செலுத்த உதவினா மாயா.
அவ இல்லன்னா சின்னச் சின்ன சந்தோஷங்களத் தர்ர பல அழகான தருணங்கள மிஸ் பண்ணியிருப்பேன்.


என் வாழ்க்கையில நடந்த எல்லாமே என்னை மாயாக்கிட்ட கொண்டு வந்து விட்டுருக்குன்னு உணர ஆரம்பிச்சேன.
இவ்ளோ சந்தோஷம் சாத்தியமா?
ஆனா.... கூடவே ஒட்டிக்கிட்டு ஒரு இனம் புரியாத பயமும் வருதே! ஏன்?


பொன்வனம் எஸ்டேட்., கூடலூர்,
நீலகிரி மாவட்டம், தமிழ்நாடு.
ஐயோ! பொய்! பொய்!...
ஹா! ஹா! ஹா!
நறுக்!
அந்த டயலாக்கை எல்லாம் இவர் சொல்லிட்டு, நான் சொன்னேன்னு ப்ளேட்டை மாத்துறாரு! நம்பாதீங்கண்ணா!


வா மாயா... நீயும் கூட வரேன்னு இவன் சொல்லவே இல்லையே!
நான் எவ்வளவோ சொன்னேன்டா... 'வேல விஷயமா சந்த்ருவோட ஒரு பத்து நாள் வெளியூர் போறேன்... நீ கூட வந்தா போர் அடிக்கும்'ன்னு சொன்னேன்.
இவ கேக்கலயே!
'உங்களைப் பாக்காம அத்தனை நாள் என்னால இருக்கவே முடியாது, என்னையும் கூட்டிட்டுப் போங்க'ன்னு ஒரே அடம்!
ஹா ஹா! சேச்சே! அப்படியில்லடா. கல்யாணம் ஆனதுலேர்ந்து அவளை வெளியூருக்கு எங்கேயுமே கூட்டிட்டுப் போகலன்னு உனக்குத் தெரியும்ல? வேல வேலன்னு உன் கூடத்தானே சுத்திக்கிட்டு இருந்தேன்?
அட ஆமால்ல?! ஐ ஆம் ஸோ ஸாரி! எனிவே மாயா, இந்த எஸ்டேட் ரொம்ப அழகா, ரம்மியமா இருக்கும். நல்லா சுத்திப் பாத்து என்ஜாய் பண்ணு.
என்னடா என்கிட்டயே டிசைன் டிசைனா ரீல் விட ஆரம்பிச்சிட்டியா?


!!
கர்ர்ர்
வருண்!!!
கர்ர்ர்


ஓ இவரா?.. பேரு தாமஸ் வார்கி... இந்த ரிஸார்ட்'டோட கேர்ட்டேகர்.


என்ன மாயா? பாவம் அந்த வயசானவரைப் பாத்தா இவ்ளோ கலவரமாகுறே?
ஹீ ஹீ... சின்ன வயசுலேர்ந்தே அவளுக்கு நாய்ன்னா பயம்..
அது ஒண்ணும் பண்ணாது மா...
ஐயையோ! பக்கத்துல வருதே!
ஆமா மாயா. அனிமல்ஸ்-லாம் குழந்தைங்க மாதிரி. நாம ஃப்ரெண்ட்லியா இருந்தா அதுங்களும் ஃப்ரெண்டலியா இருக்கும்... இப்ப பாரேன்!
ஹெல்லோ டாகி டாகி!
கர்ர்ர்ரா
ஆ! இந்த நாய்க்கு ஃப்ரெண்ட்ஷிப்'ல லாம் இன்ட்ரெஸ்ட் இல்ல போலருக்கு!
டேய்! இதப் பாத்தா நாய் மாதிரியே இல்லைடா... ஏதோ காட்டு ஓநாய் மாதிரில்ல இருக்கு!
ஆமா. இது ஒரு க்ராஸ் ப்ரீடு வுல்ஃப்-டாக்.... பேரு 'ஷாடோ'. காவலுக்காக வெச்சிருக்கோம்.
ரிலாக்ஸ் ஷாடோ... விருந்தாளிங்க பயப்படுறாங்கல்ல?
யம்மாடி! அது கண்ணைப் பாத்தீங்களா?
'ஷாடோ'வாம்! பேரைக் கேட்டாலே சும்மா அதிருதில்ல?


எங்க பாஸ் குப்தா தான் இந்த பொன்வனம் எஸ்டேட்டுக்கு சொந்தக்காரர். பெரிய பிஸினஸ் டைக்கூன். மும்பைல இருக்காரு. வருஷத்துக்கு ஒரு வாட்டி தான் வருவாரு.
மத்தப்படி இந்த இடத்தோட நிர்வாகத்தை நான் தான் பாத்துக்கறேன்.
உங்க பாஸ் இந்த வீக் வருவாரா மிஸ்டர் சந்தீப்?
பையர் யாராவது ரெடின்னு இன்ஃபார்ம் பண்ணிட்டா அடுத்த ப்ளைட் பிடிச்சு வந்துடறேன்னு சொல்லியிருக்காரு.
ஸோ... 70 ஏக்கர் ப்ராப்பர்ட்டி... ஒரு பங்களா, ரெண்டு சின்ன காட்டேஜஸ், ஒரு பண்ணை. எல்லாத்தையும் விக்கணும். சரியா?
ரைட்! அதும் ஒரு வாரத்துக்குள்ள எப்படியாவது முடிக்கணும்.
என்னது? ஒரு வாரத்துக்குள்ளயா? ஆளுங்க வந்து இடத்தைப் பாக்கவே ஒரு வாரம் ஆகும்! அப்புறம் லீகல் ஃபார்மாலிடீஸ் முடிக்கிறதுக்கு மினிமம் ஒரு மாசம் ஆகுமே!
நீங்க பையர்ஸை வரவழைச்சு இடத்தை வாங்குறதுக்கு சம்மதிக்க வெச்சிட்டா போதும். மத்த பேப்பர் வர்க், லீகாலிட்டீஸ் பத்தி கவலைப்பட வேண்டாம். அதை நான் பாத்துக்கறேன். பட் முக்கியமா, இதெல்லாமே கான்ஃபிடென்ஷியலா, காதும் காதும் வெச்ச மாதிரி நடக்கணும்.
நோ ப்ராப்ளம்! நாளைக்கே நாலஞ்சு பேர் ப்ராப்பர்ட்டிய பாக்க வர்ரதா சொல்லியிருக்காங்க... நாளான்னைக்கும் அதே மாதிரி வர சொல்லிடலாம்... எப்படியும் இந்த வாரக் கடைசியில ஒருத்தரை பிடிச்சிடலாம்.


ம்ஹூம்ஹூம்
ஹாங்?!
யாரு அந்தப் பொண்ணு?
மாயா... எஸ்டேட்டை ஒரு வாட்டி சுத்தி பாத்துட்டு வந்துடறோம். நீ ரூம்ல போய் rest எடு.
ஓக்கே!


விர்ர்ர்ரூ...ம்!
TN 18 T 2608
காட்டேஜ்ஸ்ல டூரிஸ்ட் யாராவது தங்கிருக்காங்களா?
இல்ல... ஒரு வாரமா பூட்டி தான் வச்சிருக்கோம். ஸோ.. பையர்ஸ் வரும்போது ஃப்ரீயா எடத்த காட்டலாம்.
இங்கே சுமார் 33 ஏக்கர் நிலத்துல இயற்கை விவசாயம் பண்ணிக்கிட்டு இருக்கோம்...
ஹவம்?! வேலிக்கு பின்னால யாரு அது?
ஏதோ சொல்ற மாதிரி இருக்கே!


சேளார் மேல்
வெறி கொண்டு
வதைத்திடுவாள் தீயா!
தூகம் போல
சத்ரு கொல்ல
வந்திடுவாள்
பேயா!
ஓங்காரி!
ஆங்காரி!
அள்ளை அவள்!
மாயாாாா!
21


யார் சார் அது? சூனியக்காரி மாதிரி பயங்கரமா இருக்காங்க!
அது ஒரு பைத்தியம்!
இப்படித்தான் லூசுத்தனமா ஏதாவது பாட்டு பாடிட்டு காட்டுக்குள்ள சுத்திட்டு இருக்கும். கண்டுக்காதீங்க. கௌம்பலாமா?
இப்ப காணும்! சட்டுன்னு எப்படி மறைஞ்சாங்க?
வருண்! என்னடா யோசனை? போலாமா?
ம்ம்ம்? ஆங்! போலாம்.
குர்ர்ர்... குர்ர்ர்... கூக்கூ!
மாயா பேர சொன்ன மாதிரி இருந்துதே....
நீங்க தங்குறதுக்கு எல்லா ஏற்பாடும் பண்ணிட்டேன். சாப்பிட என்ன வேணும்ன்னு முன்னாடியே சொல்லிட்டீங்கன்னா தாமஸ் சமைச்சுக் குடுத்துடுவாரு.
ச்சே! ஏதாவது மாயம் மந்திரம்ன்னு சொல்லியிருப்பாங்க... நான் தான் ஓவரா கற்பனை பண்றேன்.


அன்னைக்கு ராத்திரி... மும்பையில.
ரொம்ப நாளைக்கு 'சாமானை' என்கிட்ட வெச்சிக்க முடியாது.
ரெண்டு நாளைக்குள்ள நான் கேட்ட பணம் என் கைக்கு வரணும். இல்லேன்னா த டீல் ஈஸ் ஆஃப்!
ப்ரூஃப் கேக்குறாங்களா?... ஹம்!!!.....
ஓக்கே.... ஏற்பாடு பண்றேன்.


இங்கே!
க்ரீஈ.ஈ.ஈ.ஈ.ஈ.ச்!
ஜாக்கிரத!
ஒண்ணும் பிரச்சனை இல்ல...
இதோ ப்ரூஃப்!


ஒள......
ஊள......
ஊள......
அஊள......


ஹவ்ம்!
ஔ........
இனிமே எங்கே தூக்கம் வரப்போகுது?
கர்ர்ர்ர்ர்
அட! உன்னைத்தான் பாக்குறேன்னு தெரிஞ்சிடுச்சா ஷாடோ?
ஷ்ஷ்ஷ்! சத்தம் போடாத.




உம்ம்ம்..... உம்ம்ம்.....
ஹாங்! டக்குன்னு சைலெண்ட் ஆயிடுச்சு?
பயந்து ஓடிடுசசு!
என் பக்கமா வேற பாத்துதே!
எதப் பாத்து பயந்துச்சு?
ஆ!


ஹேய் நாந்தான்! என்ன? தூக்கம் வரலியா?
யப்பா! நான் ஒரு செக்கெண்ட் என்னவோன்னு நினைச்சேன்.
என்னன்னு நினைச்சே?
அது... வந்து... ம்ம்ம்... ஒண்ணுல்ல. விடுங்க.
ஹவ்ம்.... சரி சரி... வந்து தூங்கு.


அடுத்த நாள்.
ஃப்ளோரிங் பழசு தான் மேடம். ஆனா ஒரிஜினல் டீக் வுட்.
மத்தபடி ஜன்னல் கம்பி, கண்ணாடி, ஷோகேஸ் எல்லாம் புதுசு.
ஆமா...கொஞ்ச நாள் முன்னாடி தான் ரெனொவேட் பண்ணினாங்க.
இங்கேயிருந்து பாத்தீங்கன்னா அதோ தெரியிதுல்ல, அந்த வேலி வரைக்கும் நம்ம ப்ராபர்ட்டி தான்.
இவங்க உங்க டாட்டரா சார்?
டெய்! வைஃப் டா!
ஓ! சாரி! ஹீ ஹீ! ஆனாலும் நீங்க கில்லாடி சார்.
இங்க தான் இயற்கை விவசாயம் பண்றாங்க...
வருஷா வருஷம் நல்ல லாபம் கிடைக்குதாம். வேல்யூ கிடுகிடுன்னு ஏறிக்கிட்டே இருக்கும் சார். விட்றாதீங்க!


அன்று மாலை.
சந்தீப்.....
சொல்லுங்க வருண்.
அது என்ன?
அந்த வேர்ஹவுஸ்-ஆ சார்?... ஒரு காலத்துல மாட்டு இறைச்சி கூடமா இருந்தது. அப்புறம் மூடிட்டாங்க. ரொம்ப வருஷமா காலியா தான் இருக்கு.
சார்... அந்த பில்டிங் ரொம்ப பழசு... வுட்வொர்க் எல்லாம் டோட்டலா டாமேஜ் ஆயிருக்கு. தொட்டா இடிஞ்சு மேல விழுந்துடும்...
இனிமே அது சேஃப்டி இல்லன்னு, அதை முழுசா இடிச்சு டெமாலிஷ் பண்ண சொல்லிட்டாரு குப்தா சார்.
இரு வருண்... கோவப்படாதே... என்ன சந்தீப் இது?
வர்ர சீதேவிய நீயே துரத்தி விட்டுடுவே போலருக்கு!
புரியாம பேசாதே! இந்த வேர்ஹவுஸ்ல ஏதாவது கடத்தல் சாமானை வெச்சிருந்து நாளைக்கு ப்ரச்சனை வந்தா நாமளும் சேந்து மாட்டுவோம்.


அந்த பில்டிங் ப்ளூ ப்ரிண்ட்'ல இல்லையே? இந்த மாதிரி பர்மிட் இல்லாத ஒரு ப்ராபர்டி வெச்சிருக்கீங்கன்னு ஏன் எங்கக்கிட்ட சொல்லல?
உங்க டாகுமெண்ட்ஸ்ல ஏதாவது சரியில்லன்னா பையர்ஸ் யாரும் இவ்ளோ பெரிய இடத்தை வாங்க முன்வர மாட்டாங்க.
அதனாலதான் புது ப்ளூபிரிண்ட்டுல அத சேக்கல.
மத்தப்படி நீங்க நினைக்கிற மாதிரி இதுல தில்லு முல்லு ஏதும் இல்ல...
எடுத்தவுடனே ஏண்டா எகிர்றே?.... கஷ்டப்பட்டு புடிச்ச பெரிய க்ளையண்ட்'டா!
வாழ்க்கையில எவனையும் முழுசா நம்பக்கூடாது. எதுக்கும் நாம கொஞ்சம் உஷாரா இருக்குறது நல்லது.




ஆஆஆ!
யாரையும் காணும்! கால்ல செடி கிடி மாட்டியிருக்குமோ?
என்ன அது பளபளன்னு?
கண்ணாடியா?. ஆனா சிவப்பா இவ்ளோ வெளிச்சமா இருக்கே!


ஏதோ நகை
மாதிரி இருக்கு.
வாவ்!



இந்த பொண்ணுங்களுக்கு நகைன்னா அப்பிடி என்ன தான் க்ரேஸோ!!
ம்க்கும்! ஆம்பிளைங்க மட்டும் என்னவாம்? கார், பைக், ஃபோன்'ன்னா பைத்தியம் ஆயிடுறீங்கல்ல?
அது சரி... பட் அந்த மூக்குத்தி தங்கமா இருக்காது,
அதான் யாரோ தூக்கிப் போட்டுருக்காங்க.
சேச்சே! இதோட மதிப்பு பத்தியெல்லாம் எனக்கு கவலையில்ல வருண்.. பித்தளையாவே இருக்கட்டும்....
ஆனா பாருங்களேன். பளீர்ன்னு எவ்ளோ அழகா இருக்கு!!....
அது வேண்டாம் மாயா. குப்பையில போட்டுரு. யார் மூக்குல இருந்துதோ!... சீ!
ஐயோ! டிஸ்கஸ்டிங்! அதைப்பத்தி நினைக்காம இருந்தேன். கெடுத்துட்டீங்களே!
இப்ப என்ன? இதைத் தூக்கி எறியணும். அவ்ளோதானே?
ப்ளுங்!


போட்டாச்சு! சந்தோஷமா?
கோவமா? நான் வேணுன்னா வைரத்துலயே புது மூக்குத்தி ஒண்ணு வாங்கித் தரேன்..
ஒண்ணும் வேணாம்...
சரி... சிவப்புக்கல்லுல இதே மாடல்''ல செய்ய சொல்லி ஆர்டர் பண்ணிடலாம். ஓக்கே?
தேவையில்ல!
ஹ்ம்....
அப்ப வேற வழி இல்ல. தண்ணியில குதிச்சி அந்த மூக்குத்தியையே எடுத்துத் தரேன்.
ஐயையோ! வேணாம் வேணாம்,
அதுவும் வேணாமா?
இறங்குங்க! இருட்டுல குளத்துக்குள்ள இத்துணூண்டு மூக்குத்திய தேடப் போறாராம்! ரொம்பத்தான்!
உனக்காக என்ன வேண்ணாலும் பண்ணுவேன்.
அடடா! இதெல்லாம் இன்னும் எத்தனை நாளைக்குன்னு பாக்கலாம்!


ஆ!
என்ன மாயா?
ஹேய்! என்ன ஆச்சுன்னு சொல்லு.
யாரோ ஒரு பொண்ணு நிக்கிற மாதிரி கண்ணாடியில தெரிஞ்சிது...
என்ன சொல்றே? அங்கே யாருமே இல்லையே!
தனியா போரடிக்கிதுன்னு பேய்ப் படம் ஏதாவது பாத்தியா? ஹீ ஹீ!
சரி சரி... பிரமையாத்தான் இருக்கும். விடுங்க.
என் கண்ணுக்கு மட்டும் ஏன் இந்த மாதிரிஅடிக்கடி தெரியுது?
38


மறுநாள் மாலை.
அந்த கேரளா'க்காரர் ரொம்ப இண்ட்ரெஸ்டெட்'ஆ இருந்தாரே.. ஓக்கேன்னு சொல்லிட்டாரா?
ஒரு 50 லட்சம் குறைச்சா உடனே கையெழுத்துப் போடறேன்னு சொன்னாரு.
ஆனா டமால்'ன்னு 50 லட்சம் எப்படிறா குறைக்கிறது?
இன்னும் சில பேர் வந்து இடத்தைப் பாக்க வேண்டியிருக்குல்ல?
அதுக்கப்புறம் முடிவு பண்ணலாம்.
சரி, நான் போய் லாயரப் பாத்து பேசிட்டு நைட்டுக்குள்ள வந்துடறேன். கார் சாவி தா..
லட்சுமியக்கா!
அவ இங்கே இல்ல இல்ல'ன்னு எத்தனை வாட்டிடா சொல்றது? போடா இங்கேயிருந்து.
மாட்டேன்!
அக்காவுக்கு மட்டும் ஏதாவது ஆகியிருந்தா உங்களையெல்லாம் நான் சும்மா விடமாட்டேன்.
என்னடா? ரொம்ப துளிர்விட்டுப் போச்சா? உன்ன என்ன பண்றேன் பாரு!
ஷாடோ!
ஃப்பீ.....!


ஐயோ!
கர்ர்ர்
ர்ர்ர்ர..ப்
கெட் ஹிம் ஷாடோ!
ஹேய்!
காட்டுக்குள்ள...



ஆ!
தொப்!
ஆஆஆ.........!
?!
அஹ்!
போ!
உன்னைத்தான் சொல்றேன்! இங்கேயிருந்து ஓடு! ம்ம்ம்... சீக்கிரம்!...


ஃப்பீ.....!
ஷாடோ!


அந்த எஸ்டேட்டை விட்டு உடனே போயிடுங்க.. அங்க இருந்தா உங்க மூணு பேருக்கும் ஆபத்து!
ஆபத்தா? என்ன சொல்றீங்க?
ஒரு அமானுஷ்ய சக்தி வஞ்சம் தீக்க அங்கே வந்துருக்கு...
அந்த சக்தி உன் மனைவிய நிழல் போல தொடர்ந்து வர்ரதை என் ஞான திருஷ்டியில பாத்தேன்.
ஆனா அது என்ன? இறந்த ஒரு பொண்ணோட ஆவியா, இல்ல காட்டு மோகினியா, வேற ஏதாவது துர்சக்தியான்னு எனக்கு இன்னும் விளங்கல.
43


அப்ப நான் கௌம்பறேன் பாட்டி. காயத்துக்கு மருந்து போட்டதுக்கு ரொம்ப நன்றி.
ஆஹா! சந்தீப் சொன்ன மாதிரி இவங்க கொஞ்சம் பைத்தியம் தான் போலருக்கு. பாவம்!
ம்ம்ம்... நான் சொல்றதுல உனக்கு நம்பிக்கை இல்ல!
நம்புவே!




அட! இதெப்படி ஷவருக்குள்ள வந்துது?!
ஓ! குளத்துலேர்ந்து மோட்டார் வழியா வந்துருக்கு!
சும்மா ஒரு வாட்டி போட்டுத்தான் பாப்போமே.


வருண்?....
வந்துட்டீங்களா?
வருண்?....
ஐயோ! கரண்ட்
போச்சா?


என் மூக்குத்தி!
ச்சே! உள்ள விழுந்துடுச்சே! எப்பிடி எடுக்கப் போறேன்?
ங்ங்ங்ங்
ஹாங்?!
ஹக்!


கர்ர்ர்
ர்ர்ர்ர்ரரரர
ஆஆஆ.......!


காரைக் காணும். சந்துரு இன்னும் வரல போலருக்கு!
கையில இருக்குற காயத்தைப் பாத்து மாயா டென்ஷனாகப் போறா!
அந்த கிழவி சொன்னதையெல்லாம் அவக்கிட்ட சொல்ல வேண்டாம்... பாவம் பயப்படுவா...
மாயா?
க்ளிக்!
மாயா???
என்ன இங்கே திடீர்ன்னு இவ்ளோ ஒட்டடை?!
ஹவ்ம்? இது ஒட்டடையில்ல...
வினோதமா இருக்கு!


இந்த நேரத்துல தனியா இங்கே என்ன பண்ணிட்டு இருக்கே மாயா?
அந்த மூக்குத்தி... அதத்தான் தூக்கிப் போட்டியே! மறுபடியும் தண்ணிக்குள்ள போய் எடுத்துட்டு வந்தியா?
மாயா?!


பதிலே பேசாம போறா!
காயத்தைப் பாத்துக் கூட
ஒண்ணுமே சொல்லலியே...
என்ன ஆச்சு இவளுக்கு?



அடுத்த நாள் - பொன்வனம் டவுன் ஆஸ்பத்திரி.
நீங்க நேத்து நைட்டே வந்துருக்கணும்.. பட் 24 அவர்ஸ்'குள்ள முதல் இன்ஜெக்ஷன் போட்டாச்சு. ஸோ ப்ராப்ளம் இல்ல.
ஆனா இன்னும் நாலு டோஸஸ் இருக்கு. மிஸ் பண்ணிடாம கண்டிப்பா போடணும்.
சரி டாக்டர். தேங்க்ஸ்.
கையில கட்டோட நிக்கிறேன்... என்ன ஏதுன்னு கூட கேக்கலடா அவ!...
இன்னிக்கு காலையில கூட எது கேட்டாலும் பதில் சொல்லாம மூஞ்சை திருப்பிட்டு போயிட்டா..
ஹேய்! அங்கப் பாரு... நேத்து எஸ்டேட்டுக்கு வந்தப் பையன்.
என்னப் ப்ரச்சனைன்னு நேத்து கேக்க முடியல. வா போய் பாப்போம்.
அம்மா... நான் சொன்னேன்ல?... இவர்தாம்மா...
ரொம்ப நன்றி தம்பி... நீங்க மட்டும் குறுக்க வரலன்னா என் புள்ளைக்கு என்ன ஆகியிருக்குமோ தெரியாது!


ச்சேச்சே... எதுக்கும்மா நன்றியெல்லாம்?...
எங்களுக்குன்னு உதவி செய்ய யாருமே இல்லப்பா. உங்கக்கிட்ட ஒண்ணு கேக்கலாமா?
சொல்லுங்கம்மா. என்ன செய்யணும்?
இது என் பொண்ணு லட்சுமியோட ஃபோட்டோ.
நீங்க தங்கியிருக்குற எஸ்டேட்டுலதான் அவ ஆறு மாசமா வேலைக்கு போயிட்டு இருந்தா... போன பத்தாம் தேதி எப்பவும் போல வேலைக்கு போனவ வீடு திரும்பவேயில்ல!.... ரெண்டு வாரமா காணும்...
எல்லா இடத்துலயும் தேடிப் பாத்துட்டோம்.. அவளப் பத்தின சேதியே இல்ல. எஸ்டேட்ல போய் விசாரிச்சா நாய ஏவி விடுறாங்க தம்பி!
அந்த மேனேஜர் சந்தீப் கிட்ட பேசினீங்களா?
கேட்டேன்.. அவ அன்னிக்கு வேலைக்கு வரவேயில்ல.. எவன் கூடவோ ஓடிப் போயிருப்பான்னு அசிங்கமா பேசினாரு தம்பி.. என் பொண்ணைப் பத்தி எனக்கு நல்லா தெரியும். எங்க ரெண்டு பேர் மேலயும் உயிரா இருப்பா.
இவங்கப்பா போனப்புறம் அவ தான் ஆம்பிளை புள்ளைக்கு ஈடா குடும்பப் பொறுப்பை எடுத்துக்கிட்டு எங்களுக்காக மாடா உழைச்சிட்டு இருந்தா. எங்கள இப்படி அனாதையா விட்டுட்டு சத்தியமா அவ எங்கேயும் போயிருக்கவே மாட்டா. அவளுக்கு ஏதாவது விபரீதமா ஆயிருக்குமோன்னு பயமா இருக்கு தம்பி!
ஏதாவது தகவல் தெரிஞ்சா சொல்றீங்களா தம்பி?



சந்தீப் ஆபீஸ் ரூம்
என்ன அக்கிரமம் இது? ஒரு சின்னப் பையன்னு கூட பாக்காம இப்படி நாய ஏவி விடுறாரு உங்க ஆளு!!!
ஐ'ஆம் வெரி ஸாரி வருண்...
இதுக்கு முன்னாடி இப்படி ஒரு இன்சிடெண்ட் இங்கே நடந்ததே இல்ல.
என்ன தாமஸ் இது?
சார்... ஷாடோ அந்தப் பையனை ஒண்ணும் பண்ணியிருக்காது. சும்மா பயமுறுத்திட்டு திரும்பி வந்துருக்கும்.
இவரு திடீர்ன்னு ஹீரோ மாதிரி குறுக்க பூந்ததுல, கையில லேசா பல்லு பட்டுருச்சு... அவ்ளோதான்!
யோவ்!!! வாய்ல ஏதாவது அசிங்கமா வந்துரப்போவுது! வயசுல பெரியவன்னு பாக்குறேன்!
என்னை நாய் கடிச்சது இப்ப முக்கியமில்லை. உங்க எஸ்டேட்ல வேலை செஞ்ச ஒரு பொண்ணைக் காணுமே! அதைப் பத்தி என்ன சொல்றீங்க?
வருண்! என்னடா இது?
பரவாயில்ல சந்த்ரு.. ஐ டோண்ட் மைண்ட்.
மிஸ்டர் வருண்... அந்தப் பொண்ணு லக்ஷ்மி. ஃபார்ம்ல அவ கூட வேலை பாத்த ஒரு பையனோட ஓடிப்போயிட்டான்னு மத்த வேலையாட்கள் சொல்லித்தான் எங்களுக்கே தெரியும். ஆனா பாவம் அவங்க அம்மாவால அதை ஏத்துக்க முடியல போலருக்கு.
அவ எங்கே இருக்கான்னு எங்களுக்குத் தெரியாதுன்னு பல முறை சொல்லியும், வந்து வந்து தொல்லை பண்ணிட்டே இருக்காங்க. பிலீவ் மீ!
இதெல்லாம் நமக்கு சம்மந்தமில்லாத விஷயம் மச்சி.
வீணா மனசை போட்டு குழப்பிக்காதே! வந்த வேலைய முடிச்சிட்டு ஊருக்குக் கௌம்புவோம். சரியா?
ஹ்ம்....


ஜும் உம் லம் கிம்
நம் லம் கிளம்
கிராம் ஜூம் ஜும்





வருண்!
வருண்!
ஹேய்! என்னாச்சு? ஏன் அழறே? உடம்பெல்லாம் வேற நடுங்குது!
பயமாயிருக்கு வருண்!
எதுக்கு பயப்படுறே? என்னாச்சுன்னு சொல்லும்மா..
என்னைக் காப்பாத்து!


வாட்?! புரியிற
மாதிரி சொல்லு
மாயா?
ஹாங்?!
அது.... அது...
நான இல்ல......



ஹக்!
மாயா?
இந்த நேரத்துல எதுக்கு
காட்டுப்பக்கமா போறா?


நில்லு
மாயா!
எங்கே போறே?
காணுமே!
எந்தப் பக்கம்
போனா?


காட்டு வேர்ஹவுஸ்.
கர்ர்ர்ர்
கிரச்ர்
ஞே!


உங்ங்ங்...
பயப்படாதே! நான் உன்னை எதுவும் பண்ண மாட்டேன். இங்கிருந்து போயிடு!
ஆங்! என் கண்ணையே என்னால நம்ப முடியலியே!


க்ளிங்!
படக்!
க்ளாங்!
இல்ல... இம்பாஸிபில்!
இது... இதுவும்... கனவாத் தான் இருக்கும்! நான் இன்னும் தூங்கிட்டு தான் இருக்கேன்...
சரக்!


WARNING
CAUTION
LIQUID NITROGEN
WARNING
ஹக்!
ரத்தம்!


ரத்தம், துப்பாக்கி குண்டுகள், உடைஞ்ச கண்ணாடி வளையல்!
இந்த இடத்துல கண்டிப்பா ஏதோ விபரீதம் நடந்திருக்கு!
க்ரீரீ
?!


சர் சர் சர்
மாயா??
ஹேய்!
வருண்!
நீங்களா?


இந்த நேரத்துல இங்கென்ன பண்றீங்க?
ம்ம்ம்... அது....
தூக்கம் வரலன்னு வெளியில உலாத்திட்டு இருந்தேன்... அப்படியே இங்க வந்துட்டேன்.
வேணா வருண்... இனிமே இங்க வராதீங்க... பாம்பு, தேளு ஏதாவது கடிச்சு வைக்கப் போகுது... ரொம்ப நாளா பூட்டி வெச்சிருந்த இடம்'ல?...
ஓ! ஸாரி.. நான் கௌம்பறேன்.
பரவாயில்ல. நீங்க பத்திரமா போய் தூங்குங்க. குட் நைட்!
குட் நைட்!


மாயா!
எதுக்கு நடுராத்திரியில அந்த வேர்ஹவுஸ்'க்குப் போனே?
என் மேல ஏதாவது கோவம்ன்னா வாயத் தொறந்து சொல்லு, சண்டை போடு... ஆனா இப்படி பேசாம இருக்காதே!
இப்பல்லாம் என் கிட்ட ஒரு வார்த்தைக் கூட பேச மாட்டேங்கிறே!
வேற யாரோ மாதிரி நடந்துக்குறே!
இப்படில்லாம் நீ இருக்க மாட்டியே! என்ன ஆச்சு உனக்கு?
கேக்குறேன்ல? பதில் சொல்லு!
உன் கிட்ட எதையும் சொல்லவேண்டிய அவசியம் இல்ல!



மன நோய்கள்
மிகவும் அரிதான மன நோய்கள் - "The ...
மனப்பித்து - தமிழ் விக்கிப்பீடியா
பைப்போலார் நோய் (Bipolar disorder)
MANIC DEPRESSION(மேனிக் டிப்ரஷன் )
Schizophrenia: What You Need to Know
Schizophrenia is a serious disorder which affects how a person thinks
Paranoid Personality Disorder
Schizoid Personality Disorder
Schizotypal Personality Disorder
Cluster B Personality Disorders
Dissociative Identity Disorder
Personality Disorder)
Dissociative Identity Disorder, formerly referred to as Multiple
condition wherein a person's identity is fragmented into two
அமானுஷ்யம் : ஒரு பார்வை
இறந்தவர்கள் இவ்வுலகில் மீண்டும் வருவர் என்றும்,
இதை இரு கோணங்களில் பார்க்கலாம்.
வீடு, மரம், கண்ணாடி, பொம்மைகள், ஆபரணங்கள்
போன்ற பொருட்களை மீடியமாகப் பயன்படுத்தி
இறந்தவர்களின் ஆத்மா, இன்னொருவரின்
உடலுக்குள் புக முடியும்.


என் பொண்ணைக் காணும் தம்பி!
எங்களுக்கு எதும் தெரியாது!
ஏதோ விபரீதம் நடந்திருக்கு!
ஒரு அமானுஷ்ய சக்தி உன் மனைவிய நிழல் போல தொடருது!
கண்ணாடியில ஒரு பொண்ணு தெரிஞ்சிது வருண!
இரும்பு சங்கிலியை அறுத்து எரியிற அளவுக்கு ஒரு அசுர பலம் மாயாவுக்கு எப்படி வந்துது?
ஒரே ஒரு பார்வையில ஷாடோ வை அடக்கி விரட்டினாளே!
அந்த சிவப்புக்கல் மூக்குத்தி.... லக்ஷ்மியோடதா இருக்குமோ! அது போட்டதுலேர்ந்து தான் மாயா வித்தியாசமா நடந்துக்க ஆரம்பிச்சா.
இல்ல.... இருக்காது! ஆவி! பேய்! இதெல்லாம் உண்மையில்ல! ............ ரைட்?


நம்ம 'சாமான்' கைமாறினப்புறமா இந்த எஸ்டேட்டை விக்கிற வேலையய ஆரம்பிச்சிருக்கலாமே சார்.
எதுக்கு ரெண்டையும் ஒரே நேரத்துல பண்ணி ரிஸ்க் எடுக்குறீங்க?
ஏன்? அந்த வருண் மறுபடியும் ஏதாவது பரச்சனை பண்ணினானா?
நேத்து ராத்திரி அவன் வேர்ஹவுஸ்'க்கு உள்ளயே வந்துட்டான்... கேட்டா தூக்கம் வரல, சும்மா வந்தேன்னு சொன்னான்.
எனக்கென்னமோ அவனுக்கு சந்தேகம் வந்துடுச்சோன்னு தோணுது.
இங்கப் பாரு சந்தீப்... போன வருஷம் பிஸினஸ்'ல எனக்கு கோடிக் கணக்குல லாஸ் ஆன விஷயம் உனக்குத் தெரியும்.
நிறைய பேருக்கு நான் இம்மீடியெட்டா பணம் செட்டில் பண்ண வேண்டியிருக்கு. ஐ பேட்லி நீட் த மனி நெள!
அந்தப் பொடிப் பையன் வருணை சமாளிக்கிறதெல்லாம் நமக்கு ஒரு பெரிய விஷயமே இல்ல... அதான் நான் வந்துட்டேன்ல?


சந்துரு என்னால இன்னும் ரெண்டு மூணு வாரமெல்லாம் வெயிட் பண்ண முடியாதுன்னு முதல்லயே சொன்னெனே!
இன்னிக்கு நாளைக்குள்ள சைன் பண்றமாதிரி யாராவது இருக்காங்களா?
ரெண்டு மூணு பேர் இடத்தை வாங்குறதுக்கு ரெடி குப்தா சார். ஆனா அவங்க சொல்ற ரேட் ரொம்ப கம்மி. நாம அவசரப்படுறது அவங்களுக்கு அட்வாண்டேஜா இருக்கு.
கொஞ்சம் விட்டுப்பிடிச்சா இதை விட நல்ல ரேட்டுக்கு விக்கலாமேன்னு தான் அப்படி சொன்னேன்...
இல்ல சந்துரு... எனக்கு ஏகப்பட்ட கமிட்மெண்ட்ஸ் இருக்கு... நாளைக்கு நைட் நான் கௌம்பிடுவேன். அதுக்குள்ள சைன் பண்றதுக்கு யார் ரெடியா இருக்காங்களோ அவங்கக்கிட்ட உடனே டீலை க்ளோஸ் பண்ணுங்க.
அதை முடிச்சிட்டு நீங்களும் உடனே ஊருக்கு கௌம்பிட்டா நல்லது. பட் டொண்ட் வொர்ரீ!
உங்க கமிஷன் அமௌண்ட்'ல நான் எந்த குறையும் வைக்க மாட்டேன். அதைப்பத்தி கவலைப்படாதீங்க. ஹா ஹா...
ச்சேச்சே! அதுக்காக இல்ல சார். உங்களுக்கு எப்படி வேணுமோ அப்படியே செஞ்சிடலாம்... ஹீ ஹீ!


என்னது? இவனுங்கல்லாம் சேந்து அந்த பொண்ணு லட்சுமிய கொன்னுட்டாங்கன்னு நினைக்கிறியா? ஏண்டா இப்படியெல்லாம் சொல்லி வயித்துல புளிய கரைக்கிறே?
வேர்ஹவுஸ்ல ரத்தக்கறையப் பாத்தேண்டா!
ப்ச்! மாட்டு இறைச்சிக்கூடமா இருந்த இடத்துல ரத்தக்கறை இருக்காதா?
உடைஞ்ச வளையல் துண்டுலாம் கூட இருந்துதே! அந்த புல்லட் கேஸிங்?!
பெரிய சி.ஐ.டி. சங்கர்! துப்பறியிறாராம்!
வாழ்க்கையில இதுக்கு முன்னாடி புல்லட் கேஸிங்கை பாத்துருக்கியா நீ? ஏதோ இரும்பு சாமானோட உடைஞ்ச பீஸை இருட்டுல பாத்துட்டு பெனாத்தாதே!
அப்ப நீ இதுக்கு பதில் சொல்லு! ப்ராப்பர்ட்டி டாக்குமெண்ட்ஸ்ல அந்த வேர்ஹவுஸ் இருக்குற விஷயத்தை நம்மக்கிட்ட ஏன் மறைக்கணும்?
குறைஞ்ச விலையானாலும் பரவாயில்லன்னு எஸ்டேட்டை விக்கிறதுக்கு அந்த குப்தா ஏன் அவசரப்படணும்?
அந்த சந்தீப்பும் தாமஸும் நடுராத்திரியில துப்பாக்கியும் கையுமா எதுக்குடா வேர்ஹவுசுக்குப் போனாங்க?
அவங்க இடம்! அவனுங்க ரோந்து பாக்க போயிருப்பானுங்க! நீ ஏண்டா நேரங்கெட்ட நேரத்துல அங்கப் போனே?


என்ன சைலண்ட் ஆயிட்டே? பதில் சொல்லு! அந்த நேரத்துல நீ ஏன் அங்கே போனே?
ஹும்! இப்படியெல்லாம் நீ நடந்துக்குறதுக்கு வேற ஏதோ ஒரு காரணம் இருக்குன்னு எனக்குத் தோணுது... ஆனா என்கிட்ட சொல்ல மாட்டேங்கிறே.
சின்ன வயசுலேர்ந்து எப்பேர்ப்பட்ட விஷயத்தையும் என்கிட்டெயிருந்து நீ மறைச்சதில்ல. இப்ப மட்டும் ஏன்டா?
ஹும்!
ஹாங்?!
ஆத்தாடி! மாயா ஏன் இப்படி நமக்கு கண்ணாலயே சூடு வெக்கிறா?
என்னடா நடக்குது இங்கே?!
ஐயொ! உன் கிட்ட எப்படி சொல்வேன் சந்த்ரு?...
அது மாயா இல்ல!


ஷாடோ!
எங்கே போய் தொலைஞ்சான் இவன்!
ஃப்பி......
ஃப்பி.....
ஆங்!
யார் அது?
க்கிக்கிக்கிக்கிக்


ஷாடோ?
?!
ஐயோ!
ங்ங்கிர்ர்ரரரர
ஆஆஆ......!


DO NOT CROSS POLICE LINE
POLICE


ஐயா... கொஞ்சம் நகருங்க.
கடவுளே! என்னடா இவ்ளோ பயங்கரமாயிருக்கு!


என்ன சொல்றே சந்தீப்?! எப்படி நடந்துது?
தெரியல சார்... போலீஸாலயும் காஸ் ஆஃப் டெத் என்னன்னு சொல்ல முடியல... அட்டாப்ஸிக்கு பாடிய அனுப்பியிருக்காங்க.
ப்ளடி ஹெல்! இப்ப இதை வேற சமாளிச்சாகணுமா?
நான் பாத்துக்கறேன் சார். இன்ஸ்பெக்டர் நம்ம ஆளு தான். எதானாலும் விஷயம் நம்மளைத் தாண்டிப் போகாது..
சந்தீப்... இது.... 'அதோட' வேலையா இருக்குமா?
இருக்காது சார்... நாம அடைச்சு வெச்சிருக்குற இடத்துலேர்ந்து 'அது' தப்பிக்க வாய்ப்பே இல்ல!
எதுக்கும் போய் செக் பண்ணிட்டு சீக்கிரம் எனக்கு இன்பார்ம் பண்ணு... ஐல் பீ தேர் ஆஸ் சூன் ஆஸ் பாஸிபிள்.


கொர்ர்ர்
ர்ர்க்?!
ஐயோ! அம்மா! பேயி! என்னைய ஒண்ணும் பண்ணிராதே!
டேய் நீயா? ஒரு நிமிஷம் ஹார்ட்டு வாய் வழியா வெளியில வந்துருச்சு! ஏண்டா நடுராத்திரியில காட்டேரி மாதிரி வந்து பீதிய கெளப்புறே?
என் கூட வா!


எங்கேடா கூட்டிட்டுப் போறே?
ஷ்ஷ்ஷ்! அங்கே பாரு. சந்தீப்! வா அவனை ஃபாலோ பண்ணலாம்.
மறுபடியும் சி.ஐ.டி வேலையா? எதுக்குடா? தேவையில்லாத வம்புல மாட்டிக்கப்போறோம்!
கண்டிப்பா அந்த வேர்ஹவுஸக்குத்தான் போயிட்டு இருக்கான். பூட்டி வெச்சிருக்குற காலியான இடத்துக்கு எதுக்குடா தெனமும் துப்பாக்கியோட மிட்நைட்டுல ரோந்து போகணும்?... அங்கே என்னவோ மர்மம் இருக்கு!
ஒத்துக்குறேண்டா... நீ சொல்றதெல்லாம் உண்மையாவே இருக்கலாம். அந்த தாமஸக்கு ஆன கதியைப் பாத்ததுலேர்ந்து எனக்கு கலவரமாவே இருக்கு. இந்..
ம்ம்ம்க்!
ஷ்ஷ்ஷ்!


போச்சு! நல்லா மாட்னோம்! டேய் சந்த்ரு! இன்னிக்கு நீ டெட பாடி தாண்டீ!
ஷ்ஷ்ஷ்ஷ்! பதறாதே! அவன் நம்மள பாக்கல.
ப்ராஜெக்ட்டும் வேண்டாம் காசும் வேணாம். சொல்லிக்காம கொள்ளிக்காம ஊரை விட்டுப் போயிடலாம்டா!
நோ! இவனுங்க என்ன விஷயத்தை மறைக்கிறாங்கன்னு இன்னிக்கு கண்டுப்பிடிக்காம நான் விடப்போறதில்ல!
ஐயையோ! அதெல்லாம் வேணாண்டா! சொன்னாக் கேளு!
வருண்!!!!


அடேய்
அவசரத்துக்குப்
பொறந்தவனே!
இப்படி தனியா
பொலம்ப விட்டுட்டுப்
போயிட்டியேடா!
ங்ங்ங்
ஆங்!
ஹக்!
ங்ங்ங்
தடார்!


ம... ம...
ம.... மாயா?!
ஏன் திடீர்ன்னு
நாலு கால்ல
நடந்து
வர்ரே?
கிர்ர்ர்
ஏ... ஏ...
ஏன் உன்
கண்ணெல்லாம்
கருப்பு கருப்பா
இருக்கு?
ஆ!
மாயா!
நீ
ஒரு
பேயாஆஆஆஆ..!
ர்ங்கிர்ர்ராரா



வேர்ஹவுஸ்.
க்ர்ர்ர்!
க்ளிக்!
இந்த வழியா போய் பாக்கலாம்.
எங்கே இருக்கே சந்தீப்?
வெளியிலேர்ந்து பாத்தா தெரியல... ஆனே உள்ள இவ்ளோ இடம் இருக்கே!


ஹாங் ?!
ஸ்ஸ்ஸ்ரும்ம்ம்!
அ...!
சந்தீப்!


நோ!
ஏன் மாயாவ பிடிச்சிருக்கே?
கர்ர்ர்


ங்யங்கிர்ர்ராரா
யார் நீ?
சர்ர்ர்!
தட!



வருண்!
வேணாண்டா!
அவள ஒண்ணும் பண்ணிடாதே! ப்ளீஸ்!
அவளை விட்டுடு!
வருண்! வா இங்கேயிருந்து போயிடலாம்!
மாயாவ இந்த நிலைமையில விட்டுட்டு எப்படிடா?
நம்மளால ஒண்ணும் பண்ண முடியாதுடா!
ஏதாவது பூசாரிய கூட்டிட்டு வருவோம்! வா!


அந்த லக்ஷ்மியோட ஆவிதான் என மாயாவ பிடிச்சிருக்கு!
ஹவ்ம்! அப்படி இருக்க வாய்ப்பிருக்கு.
இறந்தவங்களோட ஆத்மா அவங்க அந்த நேரத்துல போட்டுருந்த ஆபரணங்களுக்குள்ள புகுந்து அது மூலமா வேற ஒரு மனித உடலை ஆக்கிரமிக்க முடியும்.
ஏதாவது பூஜை செஞ்சு அந்த ஆவிய உங்களால ஓட்ட முடியுமா?
முயற்சி செய்யறேன்.
ப்ளீஸ்! எப்படியாவது மாயாவ காப்பாத்துங்க.
கவலைப்படாதே தம்பி. நான் பூஜைக்கு ஏற்பாடு பண்றேன்.
அந்த லக்ஷ்மியோட குடும்பத்துல நெருக்கமானவங்க யாராவது இருந்தா கூட்டிட்டு வாங்க. உதவும்.
ஹவ்ம்?! ஏதோ தப்பாயிருக்கே!


அவ ஏன் என்னைக் கொல்லல?
ஹாங்?!
மாயா... அதான்... லஷ்மியோட ஆவி.... அவ என்னைக் கொல்ற மாதிரி பக்கத்துல வந்தா... ஆனா கர்ர்ர் புர்ர்ர்ன்னு கத்தி பயமுறுத்திட்டு மறைஞ்சிட்டா.
அந்த சந்தீப்ப எப்படி சாகடிச்சி தொங்கப் போட்டிருந்தான்னு பாத்தேல்ல.... உன்னையும் ஈசியா கொன்னுருக்க முடியும்.... ஆனா விட்டுட்டா... ஏன்?
அதையெல்லாம் யோசிக்கற நிலைமையில நான் இப்போ இல்ல சந்த்ரு... என் மாயா நல்லபடியா திரும்பி வந்தா போதும்.


ஏம்மா இங்கே வந்தே?
இனி என்ன நடக்கப் போகுதோ!
நீ ஆஸ்பத்திரியில இருக்கேன்னு தெரிஞ்சு எப்படிம்மா என்னால வராம இருக்க முடியும்?
என் செல்லமே!
லக்ஷ்மி?!
ஐயோ கடவுளே!
ஆங்!
தம்பி தம்பி! அந்த எஸ்டேட் ஆளுங்க ரொம்ப மோசமானவங்க.
அவங்களுக்குப் பயந்து தான் என்கிட்டக் கூட சொல்லாம பக்கத்து ஊரு பெண்கள் காப்பகத்துல தலைமறைவா இருந்துருக்கா....
இப்ப இவ வந்தது தெரிஞ்சா எங்க மூணு பேரையும் உயிரோட விட்டு வெக்க மாட்டாங்க! தயவு செஞ்சி அவங்கக்கிட்ட சொல்லிடாதீங்க தம்பி!


அந்த எஸ்டேட்ல பொண்ணுங்க திடீர் திடீர்ன்னு காணாம போறது ஒண்ணும் புதுசில்ல.
அப்படி காணாமப் போனவங்க அலங்கோலமான கோலத்துல பிணமா கிடைக்கிறதும் புதுசில்ல.
பளார்!
போலீஸ் கிட்ட போகவும் யாருக்கும் தைரியம் இல்ல. தலைக்கு மேல இருக்குற கடனை அடைக்கவும், என் குடும்பத்தை காப்பாத்தவும் வேற வழியில்லாம நான் அங்கே வேலைக்கு போயிட்டு இருந்தேன்.


குப்தாவும் அவனோட ஆளுங்களும் பண்ற கொடுமைகள எதுத்து நின்ன ஏழைங்க யாரும் உயிரோட வீடு திரும்பினதுமில்ல.
மடேர்!
ஒரு நாள் நானும் அவங்கக் கிட்ட மாட்டினேன்...
அன்னைக்கே நான் செத்துருக்கணும்!
ஆனா....


திடீர்னு எங்கேயிருந்தோ ஒருத்தர் வந்தாரு...
ஆஆஆஆ..!
அவர் யாரு... என்னன்னு எனக்கு சரியா சொல்லத் தெரியல... ஆனா பாத்தா சாதாரண மனுசன் மாதிரியே இல்ல...
நெருப்பு மாதிரி அவர் உடம்பெல்லாம் ஒரே வெளிச்சம்!... துப்பாக்கி குண்டுகள் அவரை ஒண்ணும் பண்ணல!


க்ராஷ்!
!!
டுப் டுப் டுப் டுப்
ஆ ஆ ஆ ஆ...!


எனக்கு அவரைப் பாத்து பயம் வரல...
ஏன்னா... ஆக்ரோஷமான அவரோட கண்கள்ல கருணையும் தெரிஞ்சிது.
என் உயிர் என் உடம்பை விட்டு கொஞ்சம் கொஞ்சமா போயிட்டு இருந்ததை அவர் பாத்தாரு.
அப்போ அவர் நெத்தியில இருந்த ஒரு சிவப்புக்கல்லை எடுத்து .........


...... என்னோட நெத்தியில வெச்சாரு. அந்தக் கல்லுக்கு உயிர் வந்த மாதிரி, தானே என் நெத்தியில ஒட்டிக்கிச்சு!
அதிசயமா... உடனே என காயங்கள் ஆற ஆரம்பிச்சிடுச்சு.
என்னைக் காப்பாத்த கடவுளே நேர்ல வந்துருக்காருன்னு நினைச்சேன்.


அப்புறம் தான் கவனிச்சேன்... அவர் உடம்புல இருந்த ஒளி மறைஞ்சிருந்துது
அதை குப்தாவும் கவனிச்சிட்டான்!
டிஷ்யாாாங்!
அவரைப் பாத்து சுட்டான்!
DANGER
LIQUID NITROGEN
டங்!
CAU
EXTREM
LIQUID
DO N
அதுக்கப்புறம் அந்தப் பாவிங்க அவரை கண்ணாப்பின்னான்னு அடிச்சு நொறுக்கினாங்க.


குண்டு அவர் பின்னாடி இருக்குற ஏதோ ஒரு பெரிய கேஸ் சிலிண்டர்ல பட்டு வெடிச்சிது.
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
CAUTION
EXTREMELY COLD LIQUID NITROGEN DO NOT TOUCH
ஆஆஆஆ..!
மடார்!
நான் அங்கேயிருந்து ஓடி வந்துட்டேன்.
பொளேர்!
அதுக்கப்புறம் என்னாச்சுன்னு எனக்குத் தெரியாதுங்க.


அதே நேரம் - வேர்ஹவுஸ்.
<இங்கே ஒரு பேஸ்மெண்ட் இருக்கு போலருக்கு!>
* நமக்குப் புரியாத அந்நிய மொழி *
<ஸ்ஸோர், நீ பக்கத்துல தான் எங்கேயோ இருக்கேன்னு என்னால உணர முடியுது>
<இதோ... உன்னை இங்கேயிருந்து கூட்டிட்டுப் போக வந்துட்டேன்!>


<ஆஆஆ! ஸ்ஸோர்!>



பிரபஞ்சத்தின்
வானில்
தேடி...


மறுவுலகில்
ிருக்கும் வேற்றாள்
வனை,
னக் கொண்டவனைத்
வ இவள்
ணைத் தாண்டி வந்தவள்!


* அந்நிய மொழி *
<ஸ்ஸோர்! உனக்கு ஒண்ணும் ஆகலியே?>
<யார் நீ?>
<ஸ்ரீனா!>



<நீ எப்படி இங்கே வந்தே?>
<இங்கே நடந்த சில விஷயங்கள் என் மனக்கண்ணுக்குத் தெரிஞ்சிது ஸ்ஸோர்>
<உடனே கிளம்பி வந்தேன்.>
<உன்ன மறுபடியும் பாத்ததுக்கப்புறம் தான் எனக்கு உயிரே வந்தது>
<என் 'த்ரிகா' தொலைஞ்சிடுச்சு ஸ்ரீனா>
<தெரியும்! உன் த்ரிகா உன் கிட்ட இல்லாத்துனால தான் உன்னை கண்டுப்பிடிக்க தாமதமாயிடுச்சு. அதை நான் இந்த இடத்துல பூரா தேடிப் பாத்துட்டேன். கிடைக்கல.>
<அந்த வயசானவன் கிட்டையும் இல்ல.... அந்த கண்ணாடி போட்டவன்கிட்டையும் இல்ல... கண்டிப்பா அவங்க முதளாளிகிட்டதான் இருக்கணும்...>
<நீ அந்த ரெண்டு பேரையும் கொன்னுட்டேன்னு எனக்குத் தோணுதே! ஏன் ஸ்ரீனா அப்படி செஞ்சே?>
<இப்படி அநியாயம் பண்றவங்களை உயிரோட விட்டு வைக்கக் கூடாது ஸ்ஸோர்! அந்த மூணாவது மனுஷனையும் கொன்னு அவன்கிட்டேயிருந்து உன் 'த்திரிகா'வை மீட்குறவரைக்கும் நான் ஓயமாட்டேன்>
<தப்பு ஸ்ரீனா! நம்ம த்ரிகாவோட சக்திய மத்தவங்களுக்கு நல்லது செய்ய மட்டும் தான் பயன்படுத்தணும்.>
<இன்னொரு உயிரை எடுக்குற உரிமை நமக்கு இல்ல. இனிமே யாரையும் கொல்ல மாட்டேன்னு சத்தியம் பண்ணு.>
<சரி ஸ்ஸோர். சத்தியம்.>


ஆஆஆஆ
<ஸ்ரீனா!>
ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்
இன்னொரு ஏலியன்! வாவ்!
டங் டங் டங்!
உன் ஆளை காப்பாத்திட்டுப் போக வந்துருக்கியா? ஹா ஹா ஹா!


அது சரி.... நீ
இந்த பொண்ணு
உடம்புக்குள்ள
எப்படி புகை மாதிரி
புகுந்தே?
ஆஹா!....
இப்பப் புரியுது!
தொப்!
இந்த
க்ரிஸ்டலுக்கு
என்னென்னவோ
மாய சக்தியெல்லாம்
இருக்கு
போலருக்கு!


ஹம்ம்ம்..
எனக்கு பணம் கோடி கோடியா கொட்டப் போகுது! ஹா ஹா ஹா!
<ஆ! ரெண்டு த்ரிகாவும் அவன் கிட்ட மாட்டிக்கிச்சே! >
எனக்கு விசுவாசமா இருந்த சந்தீப்பையும் தாமஸையும் நீ கொன்னுட்ட!!
உன்னைத் துண்டு துண்டா வெட்டி போட்டு, உன் பிணத்த விஞ்ஞானிங்க ஆராய்ச்சி பண்றதுக்குக் குடுத்துருப்பேன்.
ஆனா செத்ததைவிட உயிரோட இருக்குற ஏலியனுக்குத் தான் அவங்க அதிகமா பணம் தர ரெடியாயிருக்காங்க. அதான் உங்க ரெண்டுப் பேரையும் விட்டு வெச்சிருக்கேன்.
இவளையும் ஒரு நைட்ரோ சிலிண்டர்ல அடைச்சு வைங்க... நான் கொஞ்ச நேரத்துல வர்ரேன்.
இன்னும் மயக்கமா கெடக்காளே அந்த வருணோட வைஃப்... அவள என்ன பண்றது?
கொன்னுடு.


இன்னொன்னா? அதுவும் பெண் வகை! ஃபென்டாஸ்டிக்!
இதோ நாங்க வந்துட்டே இருக்கோம்.
நீங்க வர்ரது இருக்கட்டும்... முதல்ல எனக்குப் பணம் வரணும்! டபுளா...
குப்தா! பேரம் பேசுற நேரமா இது?
அட! இதுக்குன்னு முகூர்த்தமா பாக்க முடியும்? பணம் உடனே ட்ரான்ஸ்ஃபர் ஆகணும்.. இல்லேன்னா 'சாமான்' ரெண்டும் உங்க கைக்கு வராது.
ப்ளாக்மெயில் பண்றியா? நாங்க யாருன்னு தெரியுமில்ல?
பாஸ்! நீங்க பண்ற சட்டவிரோத ஆராய்ச்சியெல்லாம் கவர்ன்மெண்ட்டுக்குத் தெரிஞ்சா என்னாகும் தெரியுமில்ல?
சும்மா மிரட்டாம நான் சொல்றதை செய்ங்க.


சீல் பண்ணியாச்சு... அடுத்தது என்ன?
அடுத்ததா? இந்தப் பொண்ணை போடட்டுத் தள்ளணும்!
அழகா இருக்கா! மனசே கேக்கல.
ஹம்! ஆனா கடமை தானே முக்கியம்?
இவன் வேற!
ஹப்!
ஆங்!



ஆ!
கடக்!
தொப்!
ஏய்!
கும்!
கும்!
கும்!
டிஷ்யாங்!
தட்!
கும்!
ந்ங்ங்க்!


ஹயாக்!
க்ராஷ்!
தொம்!
டொங்!
பொடேர்!


மாயா!
கண்ணைத் தொறந்து பாரும்மா!
ம்ம்ம்...
ஹோ! தாங்க் காட்!
எங்கள காப்பாத்துங்க!
ஆங்? என்ன சொன்னே?
ப்ளீஸ்! எங்களுக்கு உங்க உதவி வேணும்...
ஏய்! நீதான் பேசறியா? மரியாதையா மாயாவ விட்டுடு!
இல்லன்னா இன்னும் கொஞ்ச நேரத்துல செத்துடுவோம்!



மாயா மூலமா இதையெல்லாம் செய்யிறதுக்கு மன்னிச்சிடுங்க!
எனக்கு வேற வழி தெரியல...
நீ... நீங்கல்லாம் யார்?
நாங்க ஒன்பதாவது கடக நட்சத்திர அமைப்புல இருக்கிற, 'ஒயிஸோ'ங்கிற கிரகத்த சேர்ந்தவங்க.
கொஞ்ச நாள் முன்னாடி விண்வெளி ஆராய்ச்சிக்காக பூமிக்கு வந்தாரு ஸ்ஸோர்... என் கணவர்.
அவரோட விண்கலத்துல கோளாறு ஏற்பட்டதால அவரால இங்கேயிருந்து கிளம்ப முடியல.
அந்த சமயத்துல தான் இந்த எஸ்டேட்டை சேர்ந்த அந்த மூணு அயோக்கியர்கள் கிட்டயிருந்து ஒரு பொண்ணை காப்பத்தப் போய் இவர் மாட்டிக்கிட்டாரு.
அவரைத் தேடி வந்த நானும் பிடிபட்டுட்டேன். தயவுசெஞ்சு எப்படியாவது எங்க ரெண்டு பேரோட 'த்ரிகா'வை மீட்டுக் குடுங்க. அது இல்லாம எங்களால 'ஒயிஸோ'வுக்கு திரும்ப முடியாது.
த்ரிகா-ன்னா?!


பல சக்திகள் கொண்ட அந்த சிவப்பு ரத்தினம்... எல்லா ஒயிஸோனியர்களும் பிறக்கும்போதே நெத்தியில இணைஞ்சிருக்கும்.
அது உடம்போட இல்லன்னா எங்க வலிமை கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சு உயிரே போயிடும்.
ஆனா பனியும் குளிரும் எங்க பலவீனம்! எங்களால இந்த ஐஸ் சிலிண்டர்குள்ள ரொம்ப நேரம் தாக்குப் பிடிக்க முடியாது.
நீங்க மாயாவ எந்த அளவுக்கு நேசிக்கிறீங்கன்னு எனக்குத் தெரியும்.
அவளக் காப்பாத்த எவ்வளவு துணிஞ்சு போரடுவீங்கன்னும் தெரியும்.
அதே மாதிரி தான் ஸ்ஸோர்-க்காக நான் போராடுறேன். இந்த விஷயத்துல உங்களுக்கும் எனக்கும் எந்த வித்தியாசமும் இல்ல...


க்ளிக்
உன் லாக்கெட்ட குடு குப்தா..
அட!... வந்துருக்குற ஆளப் பாத்தியா வேலு?... நம்ம ஹீரோ சார்!
வாயை மூடுறா! உன்ன மாதிரி ஆளுங்களாலதான் எல்லா ஆம்பளைங்களுக்கும் கெட்ட பேரு.
உன் லாக்கெட்டை என் கிட்ட தூக்கிப் போடு. ம்ம்ம்... சீக்கிரம்!
முடியாது... என்ன? சுடப் போறியா? எங்க சுடு பாப்போம்!
ஹம்! யூ ஆர் ரைட்! நான் சுட மாட்டேன்.
ஆனா அடிக்க மாட்டேன்னு நினைச்சியா?
ஆ!
டமார்!


டேய்! நீ யார் கிட்ட விளையாடறேன்னு உனக்கு தெரியல!
ஊஷ்!
பொடிப்பய டா நீ! இங்கே பாரு!
கும்!
கும்!
ஆ!
ய்ய்யாாா!
ஹப!
ணங்!
118


மரியாதையா இப்ப அந்த லாக்கெட்ட எங்கிட்ட குடுக்கப் போறியா இல்லையா?
ஹப்ங்ங்...
நானே எடுத்துக்கறேன்.
விர்ர்ர்ர்...
யாரோ வராங்க!
விர்ர்ர்ர்...
ஹப்ங்ங்...
ஸ்க்ர்ர்ர்ச்!



என்ன நடந்தது குப்தா?
நீ ஒரு பேராசைகாரன்னு தெரியும்... அதுக்குன்னு இப்படியா?
இவ்ளோ முக்கியமான ஒரு மேட்டர் நடந்துட்டு இருக்கும்போதே உன் இடத்தை விக்க ஏற்பாடு பண்ணியிருக்கியே!
உங்களையெல்லாம் நம்ப முடியாது. வந்ததும் இந்த இடத்தைப் பூரா உங்க ஆராய்ச்சிக்குன்னு ஆக்கிரமிப்பீங்க. எனக்கு ஒரு பைசாக் கூட கிடைச்சிருக்காது.
ஹூம்! இப்ப அதப்பத்தி பேசி யூஸ் இல்ல. வேற யாருக்கும் விஷயம் தெரியறதுக்கு முன்னாடி அந்த வருணை கண்டுபிடிச்சி தீர்த்து கட்டணும்.
க்ரீஈஈஈஈஈச்!


அந்த ஏலியன்ஸ் அவங்களோட உடம்புக்குள்ளதான் இருக்கு!
ரெண்டு பேரையும் ட்ராங்குவலைசர்ஸ்-ஆல சுடுங்க! சீக்கிரம்!


டுப்! டுப்!
டுப்! டுப்!
சுர்சுர்சுர்...!
டுப்! டுப்!
ஆங்!
பிடிங்க அவங்கள! தப்பிக்க விடாதீங்க!


அஹ்!
ஃபட்!
ங்ங்ங்க்!
சத்!
கும்!
ணங்!
டுப்! டுப்! டுப்!
டுப்! டுப்!
ஆ...!
சத்!
அஹ்!


போனாப்போகுதுன்னு விடறேன். அப்படியே ஓடிப் போயிடுங்க!
DANGER
LIQUID NITROGEN
DO NOT TOUCH
LIQUID NITROGEN
DO NOT TOUCH
EXTREMELY
உங்களை எதால சாய்க்க முடியும்ன்னு எனக்குத் தெரியும்!
ஆஆஆ...!
DANGER
LIQUID NITROGEN
DO NOT TOUCH
வூஷ்ஷ்ஷ்
தட்!
தொப்!


<ஹப்!.... ஸ்ரீனா... இந்த மனித உடம்புலேர்ந்து வெளியில வந்துடலாம்>
<எ.. என்ன சொல்றீங்க? ந... நம்ம த்ரிகாவோட சக்தி குறைஞ்சுட்டே வருது!>
<ஹப்!... இ... இப்ப இவங்க உடல்லேர்ந்து வெளியேரிட்டா உடனே செத்துடுவோம்!>
<இல்லன்னாலும் சாகத்தான் போறோம்... இன்னொரு வாட்டி பனியால தாக்கப்பட்டா நம்மளால மீண்டு வர முடியாது.>
<ஆனா வருண் மாயா பாவம்... அவங்களுக்கு எதுவும் ஆக நாம விடக் கூடாது!>
<இந்த இரக்க குணம்தான் உங்கிட்ட எனக்கு ரொம்ப பிடிச்சது ஸ்ஸோர்.>
<சாகும்போது நாம ஒண்ணா இருக்குறோமே... அதுவே போதும் எனக்கு.>
பூம்ம்ம்ம்!


சரியான நேரத்துல தான் வந்துருக்கேன்!
என்ன பாக்கறீங்க?
இங்கேயிருந்து தப்பிச்சுப் போங்க! ம்ம்ம்... சீக்கிரம்!


ஊஊஊ...ஷ்ஷ்ஷ்!
மாயா!
வருண்!




எ... என்ன பண்றாங்க?
நன்றி சொல்றாங்க மாயா.
ஆல் த பெஸ்ட்!
விஸ்ஸ்ஸ்ஸ்
ர்ர்ர்ர்ர்ர்ர்
என் ப்ளான் எல்லாத்தையும் நாசம் பண்ணிட்டு இங்கேயிருந்து போயிடலாம்ன்னு நினைச்சியாடா?
உன்னை நான் அவ்ளோ ஈசியா விட்டுற மாட்டேன்...


உனக்கு என் கைலயாலதான்டா சாவு!
மடேர்!
நான் இருக்கற வரைக்கும் அது நடக்காது.


புதிய ஆரம்பம்...